# சரண் புகுந்தோரை 'அஞ்சேல்' என அரவணைக்கும் சைதன்யபுரம்!

ஏ.எம்.ஆர்.

**சோ**ழவள நாடு! தன்னுள் பல திவ்ய க்ஷேத்திரங்களைக் கொண்டு திகழ்கிறது. அவற்றில் ஒன்றுதான் திருக்குடந்தை என்று மகான்களால் பூஜிக்கப்படும் கும்பகோணத்திலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ள **'சைதன்யபுரம்'** என்ற **சேதினிபுரம்.** கிழக்கே **ஸ்ரீ வாஞ்சியம்,** மேற்கே கல்கருட க்ஷேத்திரமான **நாச்சியார்கோயில்,** தெற்கே **திருக்கண்ணமங்கை.** வடக்கே **திருவீழிமிழலை.** இவற்றிற்கு நடுவே பச்சைப் பசேல் என்று பட்டுக் கம்பளமாய் விரிந்துள்ள நெற் பயிர்களுக்கிடையே உள்ள அழகான கிராமம் **சேதினிபுரம்.**

'முடிகொண்டான்' என்று ஸ்ரீபட்டாபி ராமனின் திருப்பெயர் கொண்ட நதி ஊரை அணைத்துச் செல்லும் புனித நதியாக விளங்குகிறது. நீர்வளத்தையும், நிலவளத்தையும் வாரி வழங்கியுள்ளது இப்புண்ணிய நதி. இயற்கை அன்னையின் மடியில் தவழும் சைதன்யபுரம் - சிவபெருமான், பெருமாள், விநாயகர், ஐயனார், காளி, மஹாமாரி என்று நான்கு திக்குகளிலும் கோயில்கள் அமைந்துள்ள தெய்வீகநல்லூர். ஒரு காலத்தில் வேத பாராயணங்களும் நாம சங்கீர்த்தனங்களும் இடைவிடாது நடைபெற்ற புண்ணிய பூமி. **பல மகான்களின் அவதார ஸ்தலமாகவும், அருளாளர்களின் வருகையால் புனிதமடைந்த பூமியாகவும் திகழ்கிறது சைதன்யபுரம்.**



ஸ்ரீ சுந்தரேஸ்வரர் — ஸ்ரீ மீனாட்சி அம்பிகை.

## சுக்ல யஜுர் வேதம்!

தம் யோக சக்தியால் சூரிய மண்டலத்திற்கே சென்று, சூரியபகவானையே தனது குருவாகக் கொண்டு, அவரிடத்தில் ரகசியமாக இருந்த **'சுக்ல யஜுர் வேதம்'** என்ற ஒப்பற்ற வேதத்தைக் கற்று, நமக்கு அதனை அருளியவர் **ஸ்ரீ யாக்ஞவல்க்ய மகரிஷி.** அத்தகைய அரிய யஜுர் வேதத்தை, காசியிலிருந்து எழுந்தருளிய **சிந்தாமணி பட்டர்** என்ற மகான், தென் தேசத்தில் பல சீடர்களுக்குப் பூரணமாய் கற்பித்தார். அத்தகைய சீர்மிகு **சுக்லயஜுர்வேதிகளே** இவ்வூர்வாசிகள்.

அந்நாளில், பல மன்னர்களின் சபையில் 'சுக்ல யஜுர் வேதத்தை' வீணாகானம் மாதிரி கனபாராயணம் செய்து, விருதுகளும், சன்மானங்களும் பெற்ற, இவ்வூரைச் சார்ந்த **அமரர் ஸ்ரீ கோபால கனபாடிகளின்** குருகுலத்தில் வேத அத்யயனம் செய்து பெரும் புகழை ஈட்டியவர்கள் பலர். சுக்ல **யஜுர் வேதத்திற்கு தென் தமிழ்நாட்டின் தலைசிறந்த கேந்திரமாகத் திகழ்ந்தது இவ்வூர்.**

## பக்திக்காக பதவியைத் துறந்த மகான்!

'பார் அட்லா' (Bar–at–law) வாக இருந்து, பக்தி யோகத்தில் திளைத்து, பகவான் நாமசங்கீர்த்தனத்திற்குத் தொண்டாற்ற, தனது உயரிய பதவியைத் துச்சமென உதறித் தள்ளி, தனது வாழ்நாள் முழுவதும் நாம சங்கீர்த்தனம் செய்து, பகவானின் திருவடிகளை அடைந்த **ஸ்ரீ கோதண்டராமஸ்வாமிகளின் அவதார ஸ்தலமும் இதுவே. இவர் நிறுவிய 'ஸ்ரீ பாண்டுரங்க மடம்'** இன்றும் சென்னை **திருவல்லிக்கேணியில்** உள்ளது.

## ஸ்ரீ ராம்சுரத்குமார்

ஒரு சமயம் திருவண்ணாமலையில், **யோகி ஸ்ரீ ராம்சுரத்குமார் ஸ்வாமிகளை** இவ்வூர் பக்தர்கள் தரிசனம் செய்தபோது, அமரர் ஸ்ரீ கோதண்டராமஸ்வாமிகளைப் பற்றி அம்மகான் குறிப்பிட்டுப் பேசியது மெய்சிலிர்க்க வைக்கும் அனுபவம்! மகான்கள் அவதரித்த தலங்களும், அவர்கள் வசித்த ஊர்களும், அவர்களது திருவடி ஸ்பரிசம் பட்ட புண்ணிய பூமியும்

திருக்கோயில்களே அல்லவா!

**காஞ்சி ஸ்ரீ மகா பெரியவாள்** பல தடவை விஜயம் செய்து, அனுக்ரஹ பாஷணம் செய்து ஆசீர்வதித்த கிராமம் இது. முன்னர் குறிப்பிட்ட அமரர் ஸ்ரீ கோபால கனபாடிகள் இறுதிக் காலத்தில் உடல்நலமின்றி படுக்கையில் இருந்த போது, காஞ்சி **ஸ்ரீ மகா பெரியவாளே வீட்டிற்குள் வந்து, அவருக்கு ஆறுதல் கூறி, அவரை ஆசீர்வதித்து பெருமைப்படுத்தினார்கள்.**



பாழடைந்த நிலையில் கேட்பாரற்றுக் கிடக்கும் ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலயம்!

**அந்திம காலத்தில் இறைவனே மகா பெரியவா உருவில் நேரில் வந்து, தரிசனம் அளித்ததுடன், ஆறுதல் அளித்து, அனுக்ரஹமும் செய்தார் என்றால், அந்த ஸ்ரீ கோபால கனபாடிகள் எத்தனை பாக்கியசாலி?**

ஆக, வேதமும், நாதமும் இணைந்து ஆன்மிக மணம் கமழும் அற்புத கிராமம் இது. இப்போதும் **சங்கடஹர சதுர்த்தி** உற்சவம், **நவராத்திரி, ஆருத்ரா தரிசனம், வைகுண்ட ஏகாதசி, ஸ்ரீ ராமநவமி, ஸ்ரீ சீதாகல்யாண உற்சவங்கள்** சிறப்பாய் நடைபெற்று வருகின்றன. **இச்சீர்மிகு கிராமம் திருவாரூர் மாவட்டம் குடவாசல் வட்டத்தில் அமைந்துள்ளது.** ஊரில் சுபகாரியங்கள் நடத்த **ஸ்ரீசைதன்யபுர ஆஸ்திக ஸமாஜ்** கடந்த 2006-ம் ஆண்டு துவங்கப் பெற்று, இன்று வரை பல அரிய திருப்பணிகளைப் பெரியோர்களின் ஆசிகளினாலும், பக்தகோடிகளின் உதவியினாலும் இனிதே நிறைவேற்றி வருகிறது.

## புராதன ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம்!

இத்தகைய தன்னிகரற்ற தெய்வீகப் பெருமை பெற்றதும், புராதனமான சைதன்யபுரம் திருத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் **ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம்** மிகவும் பழைமையானது. இக்கோயில் சிதிலமடைந்த நிலையில் உள்ளதால், **ஆஸ்திக ஸமாஜ்** மூலம் திருப்பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. திருப்பணிக்கான செலவு சுமார் 18 லட்ச ரூபாய் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. சிவநேயச் செல்வர்களும், பக்தகோடிகளும் தாராளமாய் நன்கொடை வழங்கி, திருப்பணியை இனிதே நிறைவேற்ற உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பரம புண்ணியத்தைத் தரும் இக்கைங்கர்யம். நமக்கு உதவுவார் யாரும் இல்லை. வெளிநாடுகளில் உள்ள அன்பர்களும் உதவவேண்டும். திருக்கோயிலில் ஒரு தீபம் ஏற்றிவைத்தால்கூட, பல பிறவிகளுக்கு அப்புண்ணியம் நமக்குத் துணைவரும். திருக்கோயிலைச் சீர்செய்தால் நாட்டிற்கும் நல்லது.

**நன்கொடைகளைக் காசோலை, வரைவோலை மற்றும் பணவிடை மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம். ஸ்ரீ சைதன்யபுர ஆஸ்திக ஸமாஜ் (பதிவு), ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, கும்பகோணம் பஜார் கிளை, கிளை கோட் (Code) - 7852. சேமிப்புக் கணக்கு எண்: 10720290242-ல் திருப்பணிக்கான உதவிகளைச் செலுத்தலாம்.**



பாலாலயத்திற்கு முன் திருக்கோயிலில் நடைபெறுகிறது சுமங்கலி பூஜை!

**மேலும் விவரங்களுக்கு: திரு. வி. ராம்பிரசாத் - 9003034098**

**திரு. பி. வெங்கட் - 9952904445 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.**